கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர்.வசந்தவேல், உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட எறையூர், எறையூர் பாளையம், எல்லை கிராமம், கூ.தாங்கல், மயிலாடுந்தாங்கல் தானம், கா.பாளையம், காட்டுச் செல்லூர், காட்டு எடையார், நரி பாளையம் ஆகிய கிராமங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார், இதில் மேற்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர், ப.ராஜவேல், ஒன்றிய துணை பெருந்தலைவர் அலெக்சாண்டர் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில்

ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்!

கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் அறிக்கை!

சென்னை, ஜூன் 8-

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத் திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 2005-ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் முயற்சியில் கொண்டுவரப்பட்ட நிறுவனம், ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேசிய மேம்பாட்டு நிறுவனம் (NIEPMD) ஆகும். மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

தேசிய நிறுவனமான NIEPMD கிழக்குக் கடற்கரைச் சாலை, முட்டுக்காடு, கோவளத்தில் அமைந்துள்ளது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திற னாளிகளுக்கு இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக மதிப்புமிக்க சேவைகளை வழங்கி வருகிறது.

ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஊனங்கள் அமையப்பெற்று சிரமப்படுபவர்களு க்கும், பல்வகை ஊனம் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் மதிநுட்ப மிக்க மற்றும் நுண்ணிய அறிவியல் முறை சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் நிறுவனமாக NIEPMD இருப்பது குறிப்பிடத் தகுந்ததாகும். 2024-25 ஆண்டு செயல் அறிக்கையின் படி புதிய பயனாளர்கள்: 4565 நபர்களும்; தொடர் பயனாளர்கள்: 52342 நபர்களும் பயன் பெற்று வந்துள்ளனர். பின்வரும் துறைகள் மற்றும் பிரிவுகள் இதில் செயல்பட்டு வருகிறது.

1.மருத்துவ அறிவியல் துறை

a)செயற்கை அவயங்கள் மற்றும் உபகரணங்கள் துறை.

b)இயன் முறை சிகிச்சை.

c)தொழில்சார் சிகிச்சை.

2.மருத்துவ உளவியல் துறை.

3.பேச்சு, செவிப்புலன் மற்றும் தகவல் தொடர்புத் துறை.

4.சிறப்புக் கல்வித் துறை.

5. முதியோர் தற்சார்பு வாழ்க்கைத்துறை என பல்வேறு பிரிவுகளுடன் தமிழகத்தின் தேசிய நிறுவனமாக பரிணமித்து சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பள்ளிகளும், அவர்களை முறையாக பராமரிப்பதற்கான சிகிச்சைகளும், கூடுதலாக அவர்களை முறைப்படி வழி நடத்த தேவையான சிறப்பு நிபுணர்களையும் உருவாக்குகின்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்ட கல்லூரியும் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் 24 நிரந்த பணியாளர்களும் மற்றும் 150-க்கும் மேற்பட்ட ஒப்பந்த பணியாளர்களும் தொடக்கத்தில் இருந்து இந்நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக தங்களை அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக தினசரி செயல்பாடு, பராமரிப்பு, மறுவாழ்வு சேவைகள், சிறப்புக் கல்வி, நிர்வாகம், விடுதி பராமரிப்பு, சிகிச்சை சேவைகள் மற்றும் வெளிநடவடிக்கை என பல திட்டங்களுக்கு கணிசமாக பங்களிக்கின்றனர்.

பெரும்பாலும் தங்களுடைய வாழ்நாளின் நேரத்தை இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு, சொற்ப ஊதியம் கொடுக்கப்பட்டு வந்த நிலையில், பல்வேறு பேச்சுவார்த்தைக்கு பின், செப்டம்பர் 2024 ஆண்டு அமைச்சகத்தின் ஒப்புதலோடு, திருத்தி அமைக்கப்பட்ட ஊதியத்தை வழங்குவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவித்தது. அதன் அடிப்படையில் எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தியதில் தேர்ச்சி பெற்றதோடு, அனுபவ தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து ஒப்பந்த ஊழியராக அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பந்த ஊழியர்களாக பணியாற்றி வருபவர்கள் 2024-2027 ஆண்டுக்கான ஒப்பந்தம் முடிவதற்கு முன்னரே இந்த நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, ஊழியர்களை வேலையை விட்டு நிறுத்துவதாக தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக ஏப்ரல் 2026 ஆண்டு புதிதாக கூடுதல் பொறுப்பாக பதவியேற்றுள்ள இயக்குனர் (NIEPMD) டாக்டர் பி. வி.ராம்குமார் அவர்களின் நியமனத்திற்குப் பிறகு, NIEPMD- இல் கிராண்ட்- இன்-எய்ட் (GIA) நிதிநிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தேவையான அளவு நிதி இல்லை என மேற்கோள் காட்டி உடனடியாக பெரிய அளவிலான 100-க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களை நீக்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் தமிழர்களாகிய இந்த நிறுவன ஊழியர்கள் மீது கடுமையான இந்தி திணிப்பு நடப்பதாகவும் புகார் எழுந்துள்ளது.

இது ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே அச்சத்தையும், நிலையற்ற தன்மையையும், மன அழுத்தத்தையும் உருவாக்கியுள்ளது. வயது மூப்பின் காரணமாக புதிதாக பணி கிடைப்பது என்பது எளிதானதல்ல என்பதால், அவர்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் கேள்விக்குறியாகி உள்ளது.

இதனால் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்ற பெரும்பான்மை ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும்ப பெற்றோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். சொல்லப்போனால் மேல் குறிப்பிட்ட செயல்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு ஒரு சாதாரண சிகிச்சை மையமாகவே இதை செயல்படுத்துவதற்கு தான் இந்த அதிகாரிகளும் ஒன்றிய அரசும் திட்டமிடுகிறதோ என்ற எண்ணம் எழுகிறது.

எனவே சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் தலையிட்டு ஊழியர்களின் வேலை வாய்ப்பை நிரந்தர தன்மையுடையதாக மாற்றி வாழ்வாதாரத்தையும்; இந்நிறுவனம் எவ்வித இடையூறுமின்றி திறம்பட செயல்படவும்; மாற்றுத்திறனாளி குழந்தைகளை பாதுகாத்திடவும், மாற்றுத்திறனாளிகளின் அணி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தேசிய அரசியலில் பலமான அதிர்வலைகள் உருவாகும்!

வரும் எட்டாம் தேதி டெல்லியில் நடைபெறுவதாக இருக்கும் இந்தியா கூட்டணி கட்சிகளின் முக்கியமான கூட்டத்தில் தி.மு.க. பங்கேற்காது என்று அறிவித்த வினாடியில் இருந்து, தேசிய அரசியலில் ஒருவிதமான பதற்றநிலை உருவாகிவிட்டிருக்கிறது என்பதை,

சிலர் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள், சிலர் வெளிக்காட்டாமல் கடந்து போக முயற்சிப்பார்கள். ஆனால் வரும் வாரங்களில் இதற்கான மிகப் பலமான அதிர்வலைகள் தேசிய அரசியலில் பல பரிணாமங்களை உருவாக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ப.சிதம்பரம் துவங்கி, அவரது மகன், கிரிஷ் சோடங்கர், கார்கே, நாராயணசாமி, சிவக்குமார், திருமாவளவன், லோக்கல் காங்கிரஸார் சிலர் உள்ளிட்ட பலரும் தி.மு.க.வின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும்,

அதில் சிலர், தி.மு.க.வின் இந்த முடிவானது, பா.ஜ.க.வுக்கு சாதகமாக அமைந்து விடும் என்று எச்சரிக்கும் தொனியிலும், காங்கிரஸின் லோக்கல் புரோக்கர் மாணிக்கமும் தி.மு.க., பா.ஜ.க.வுக்கு ஆதரவாச் செயல்படுகிறது என்கிற ரீதியில் வன்மத்தை கக்கியும் பேசிவருகின்றனர்.

ஆனால் காங்கிரஸ் மட்டுமல்லாது, விஜய் பாஷையில் சொல்வதானால், வி.சி.க. உள்ளிட்ட அல்லு சில்லு கட்சிகள் எல்லாம் தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கும் போது நாங்கள் ஆதரவளிக்கா விட்டால், மறைமுகமாக ஆளுநர் ஆட்சி என்கிற வகையிலோ, அ.தி.மு.க.வின் ஒரு பிரிவு ஆதர வளித்து பா.ஜ.க. ஆதரவு ஆட்சியாக அமைந்து விடும் என்கிற காரணத்தாலோ தான் நாங்கள் பின்னங்கால் பிடறியில் அடிபடும் அளவிற்கு ஓடிச்சென்று த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்து,

சௌமியன் வைத்தியநாதன்
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்

கட்டில் மெத்தையில் கூட படுக்காம, வெறும் சோஃபாவிலேயே படுத்துறங்கி, அமைச்சர் பொறுப்பை ஒரு முள் படுக்கையாக பாவித்து பா.ஜ.க. ஆட்சி இங்கே வந்து விடாமல் தடுத்து விட்ட ஒரு ஜென் மனநிலையில் இருக்கின்றோம் என்று அளந்து விட்டுக் கொண்டி ருக்கின்றனர்!

ஆனால் சற்று நிதானமாக யோசித்தால், பா.ஜ.க. ஆட்சி இங்கே தமிழ்நாட்டில் ஏற்பட வாய்ப்பே இல்லை. ஆளுநர் ஆட்சி அமைந்தாலும், மீண்டும் ஆறு மாதங்களுக்குள் மறு தேர்தல் வந்து விடும். அப்படியே அ.தி.மு.க.வின ஆதரவைப் பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்தாலும்,

அ.தி.மு.க.வினர் தண்ணீர் போன்ற ஒரு திரவம். அது எந்த குடுவையில் அல்லது பாத்திரத்தில் ஊற்றப்படுகிறாதோ அந்த வடிவத்தையே தனதாக்கிக் கொள்வார்கள். அதாவது பா.ஜ.க. கூட்டணி என்றால் பா.ஜ.க. மாதிரியும், காங்கிரஸ் கூட்டணி என்றால் காங்கிரஸ் மாதிரியும், த.வெ.க. கூட்டணி என்றால் த.வெ.க. மாதிரியும் தங்களை தகவமைத்துக் கொள்வார்கள் அல்லது மாற்றிக் கொள்வார்கள்.

ஆகவே மறைமுகமாக பா.ஜ.க. வந்துவிடும், மல்லாக்கப்படுத்து பா.ஜ.க. வந்து விடும் என்று இந்த அல்ற சில்றைங்க எல்லாம் உதார்விடுவது ஆகச் சிறந்த நகைமுரண்!

போகட்டும், இவர்கள் உண்மையாகவே பா.ஜ.க. எதிர்ப்பில் அவ்வளவு உறுதியானவர்கள் என்றால், ஒரு அறம் சார்ந்த நேர்மையான இயக்கங்களாக இருந்தால், கம்யூனிஸ்டுகள் போல வெளியில் இருந்து பிரச்சினைகளின் அடிப்படையில் ஆதரவு தெரிவித்து இருக்க வேண்டும். அல்லது, ஒரு குறைந்தபட்ச செயல் திட்டத்தை வடிவமைத்து அதில் த.வெ.க.வை கையெழுத்திட வைத்து உள்ளே நுழைந்திருக்க வேண்டும்.

ஆனால் இவர்களில் நோக்கமும் அவசரமும் எப்படியிருந்தது என்றால், அ.தி.மு.க.வின் ஒரு பிரிவு உள்ளே நுழைந்து விட்டால், தங்களுக்கு கிடைக்கும் பணமும் பதவியும் கிடைக்காமல் போய்விடுமே என்கிற அவசரத்தில், அள்ளித் தெளித்த கோலமாய் போய் ஒட்டிக் கொண்டார்கள் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்குமே தெரிந்த உண்மை!

அவர்கள் சொல்வதில் ஒரு உண்மை இருக்கிறது. அவர்கள் நோக்கத்தில் பழுதில்லை, அவர்கள் கொள்கைப் பிடிப்போடுதான் இருக்கின்றார்கள் என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொண்டால்....

ஒரு மாநிலத்தில் மறைமுக பா.ஜ.க. ஆட்சி அமையாமல் தடுப்பது முக்கியமா அல்லது ஒன்றியத்தில் மீண்டும் பா.ஜ.க.வின் நேரடி ஆட்சி அமையாமல் தடுப்பது முக்கியமா என்றால்,

இவர்கள் எதைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்?

ஒன்றியத்தில், பா.ஜ.க.வுக்கு கடிவாளம் போடும், மட்டுப்படுத்தும், கட்டுப்படுத்தும், அல்லது ஆட்சிக்கே வரவிடாமல் தடுக்கும் ஒரு ஆட்சி அமைவதற்குத்தானே இவர்கள் முன்னுரிமை தந்திருக்க வேண்டும்? அதாவது 'இந்தியா' கூட்டணியின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, தி.மு.க.வுடன் இவர்கள் அனுசரணையாக இருந்திருக்க வேண்டுமா? இல்லையா?

சரி, இனி தி.மு.க. இடத்தை த.வெ.க.வை வைத்து இட்டு நிரப்பிக்கொள்வோம் என்று இவர்கள் சொல்வார்களேயேனால், காங்கிரஸ், வி.சி.க. மற்றும் ஐ.யு.எம். எல் கட்சிகளின் ஒன்பது எம்.எல்.ஏ.க்களையும் ராஜினாமா செய்யச் சொல்லி விட்டு, இவர்கள் வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் தேர்தலை சந்தித்து, மீண்டும் ஒன்பது எம்.எல்.ஏ.க்களை த.வெ.க. கூட்டணியோடு நின்று வென்று காட்டி விட்டு,

இனிமேல் தி.மு.க. இடத்தில் நாங்கள் த.வெ.க.வை வைத்து சமன் செய்து கொள்வோம் என்று சொன்னால் மட்டுமே இவர்களின் அந்த வாதம் எடுபடும். Otherwise இவர்கள் மறைமுகமாக வெளியிடும் இந்த காரணம் வெறும் சப்பைக்கட்டாகவே இன்னபிற தேசியக் கட்சிகளாலும், இந்தியா தழுவிய மாநிலக் கட்சிகளாலும் கணிக்கப்படும்.

சரி அடுத்த கட்டத்திற்கு வருவோம்.

தி.மு.க. இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றால் என்னவாகும்?

ஏற்கனவே அந்த 'இந்தியா' கூட்டணியில் இருக்கின்ற முக்கிய கட்சிகளான அகிலேஷ் யாதவ்வின் சமாஜ்வாதி கட்சி, தேஜஸ்வி யாதவ்வின் ராஷ்டிரிய ஜனதாதளக் கட்சி, கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள இன்னபிற மாநிலக் கட்சிகள் எல்லாம் தி.மு.க. மற்றும் அதன் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீதான நம்பிக்கையிலும், அன்பிலும், கொள்கைப் பிடிப்பிலுமே பற்றுக் கொண்டு இந்தக் கூட்டணியில் நீடித்து வருகின்றன.

ஆகவே தி.மு.க. தனது ஆட்டத்தை வரும் வாரங்களில் டெல்லியில் இருந்து துவங்கப் போகின்றது. காங்கிரஸ் முஃப்த் பாரத் கோஷத்தை முன்னெடுத்தது என்னவோ பா.ஜ.க.தான்.... ஆனால் அதை முடித்து வைக்கப் போவது தி.மு.க.!

காத்திரு பகையே..!

"அவருக்குத் தெரியவில்லை"

அவருக்குத் தெரியவில்லை
அரசு நாற்காலிக்கு
நான்கு கால்கள்
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு கனிவு

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் குணம்
தங்கத்தட்டில் வைத்த
சோறாக
இருக்க வேண்டும்
தகரத் தட்டில் வைத்த
நரகலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த நாற்காலியின் தரம்
மலரை மொய்க்கும்
வண்டாக
இருக்க வேண்டும்
மலத்தை மொய்க்கும்
ஈயாக அல்ல

அவருக்குத்
தெரியவில்லை
அந்த
நாற்காலியின்
குரல்
சந்தனக் குழைவாக
இருக்க வேண்டும்
சாக்கடைக் கழிவாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் கம்பீரம்
கொள்கையின் உயரமாக இருக்க
வேண்டும்
கட்டைக்கால் உயரமாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
அந்த
நாற்காலியின் துணிவு
பருந்துப் பாய்ச்சலாக
இருக்க வேண்டும்
ஊர்க்குருவி கூச்சலாக அல்ல

அவருக்குத் தெரியவில்லை
கோட் சூட் போடுவது
முக்கியமல்ல
தமிழர்கள் கோவணாண்டி
ஆகக் கூடாது
என்பதே முக்கியம்

தனிவிமானத்தில்
சிகை அலங்கார நிபுணரோடு
செல்வது முக்கியமல்ல
ஒன்றியம்
தமிழ்நாட்டை மொட்டையடிக்கக்
கூடாது
என்பதே முக்கியம்

நரம்பு புடைக்க
வசனம் பேசுவது
முக்கியமல்ல
சமூகநீதி சமநீதி
மெலியக் கூடாது என்பதே முக்கியம்

என்ன சொல்லி
என்ன பிரயோஜனம்?

அவருக்குத் தெரியவில்லை
எதுவுமே!

ஆண்டாள் பிரியதர்ஷினி
துணைத் தலைவர்
தி.மு.க. செய்தித் தொடர்புக் குழு

திண்டிவனம் நகர முன்னாள் அவைத் தலைவர் செல்வராஜ் மறைவு!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அஞ்சலி!

திண்டிவனம், ஜூன் 8 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர முன்னால் அவை தலைவராகவும்,நகர மன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர் செல்வராஜ் வயது 75.இவர் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார்.

இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் திண்டிவனம் நகராட்சி பூதேரி பகுதியில் உள்ளஅவரது வீட்டில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்குநேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து மறைந்த முன்னாள் நகர அவைத் தலைவர் செல்வராஜின் குடும்பத்தாருக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆறுதல் தெரிவித்து நிதி உதவி வழங்கினார்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்டப் பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,

நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நிர்வாகிகள் ஆடிட்டர் பிரகாஷ், ரஷீத் கான், சூரிய பிரகாஷ், சுரேஷ் உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

கும்மிடிப்பூண்டி கி.வேணு மைத்துனர் மறைவு!

திருவள்ளூர், ஜூன் 8 -

திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் கி. வேணு அவர்களின் மைத்துனரும், கும்மிடி ப்பூண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கி. வேணு ஆனந்த் மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி ஆகியோரின் மாமாவும், கும்மிடி ப்பூண்டி தெற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர் பாண்டுரங்கன் அவர்களின் சகோதரருமான பி. வேணு கோபால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், ஜமீன்கோடங்கிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.34.23லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தினகரன், ஹைகோர்ட் மஹாராஜா பள்ளித் தலைமை ஆசிரியை இந்திரா, விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப பணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் முன்னாள் நகர அவை தலைவரும், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் பூதேரி செல்வராஜ் வயது மூப்பு காரணமாக உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடலுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.